## வேளாண்மைத் துறை –

## அறிவிப்புகள் 2011–2012

1. பூலோக வைகுண்டம் என்று அழைக்கப்படும், புண்ணிய பூமியாம் ஸ்ரீரங்கம் பகுதியில், மகளிர் தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தினை **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா** அவர்கள் தங்கள் திருக் கரங்களால் துவக்கி வைத்துள்ளார்கள். இந்தக் கல்லூரியில் நடப்பாண்டில் 39 மாணவிகள் சேர்க்கப்பட்டுள்ளனர். **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா** அவர்கள், ஆட்சி பொறுப்பில் அமர்ந்தவுடன் வேளாண்மைத் துறைக்கு அளித்த முதல் அரசாணை என்பதை பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

2. வேளாண்மைத் துறையில் வட்டார அளவில் **1991–**ஆம் ஆண்டுக்கு பிறகு புதிய வாகனங்கள் வாங்கப்படாததன் காரணமாக, அனைத்து வாகனங்களும் தற்போது பழுதடைந்த நிலையில்

உள்ளன. இதன் விளைவாக, விவசாயிகளுக்கும் விரிவாக்க அலுவலர்களுக்கும் இடையே பெருத்த இடைவெளி ஏற்பட்டு, வேளாண் பணிகளில் தொய்வு ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் வேளாண் விரிவாக்கப் பணிகளுக்கு புத்துயிர் ஊட்டும் வகையில், **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா** அவர்கள் முதற் கட்டமாக 213 புதிய வாகனங்கள் வாங்க கருணை உள்ளத்தோடு இசைவளித்துள்ளார்கள்.

3. வேளாண்மைத் துறையின் பணிகளை விரைந்து செயல்படுத்தவும், மேலும் பல புதிய வேலைவாய்ப்புகளை வேளாண் பட்டதாரிகளுக்கு அளிக்கவும் மத்திய அரசின் அட்மா திட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டச் செயலாக்கத்துக்கு 10.74 கோடி ரூபாய் நிதி மத்திய அரசால் ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால், இந்த நிதியை முந்தைய மைனாரிட்டி தி.மு.க. அரசு முற்றிலும் பயன்படுத்தாததன் காரணமாக வேளாண் விரிவாக்கப் பணிகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன, இந்த நிலையை மாற்றி

அட்மா திட்டத்தின் கீழ் அயல்பணி மற்றும் ஒப்பந்த அடிப்படையில் மாநில, மாவட்ட மற்றும் வட்டார அளவில் 1300 அலுவலர்கள் மற்றும் பணியாளர்களை நியமனம் செய்ய **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா** அவர்கள் ஒப்புதல் அளித்துள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**4.** மாறி வரும் விஞ்ஞான வளர்ச்சிக்கு ஈடு கொடுக்கின்ற வகையில், நவீன வேளாண் தொழில் நுட்பங்கள் குறித்த தகவல்களை விவசாயிகள் உடனுக்குடன் ஒரே இடத்தில் பரிமாற்றம் செய்து கொள்ளும் வகையிலும், வேளாண்மைத் துறை மூலம் செயல்படுத்தப்படும் அரசின் திட்டங்கள் குறித்த சந்தேகங்களை நீக்கும் வகையிலும், வேளாண்மைத் துறையின் அனைத்து பிரிவுகளையும் ஒருங்கிணைத்து, முதற்கட்டமாக 15 கோடி ரூபாய் செலவில் 10 உழவர் மையங்கள் அமைக்க **மாண்புமிகு தமிழக முதலமைச்சர்**

**இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா** அவர்கள் இசைவு அளித்துள்ளார்கள்.

5. திருந்திய நெல் சாகுபடி தொழில் நுட்பத்தினை கடைபிடித்து மாநிலத்திலேயே அதிக உற்பத்தி திறன் பெறும் விவசாயிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்கும் வகையில், சிறப்பு விருது ஒன்றினை உருவாக்கவும், 5 லட்சம் ரூபாய் பரிசு வழங்கவும் **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா** அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். இந்த விருதும், பரிசும் ஒவ்வொரு ஆண்டும் குடியரசு தினத்தன்று வழங்கப்படும்.

6. **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா** அவர்களின் ஆணைப்படி இயந்திரமயமாக்குதல் மூலம் வேளாண் உற்பத்தியை பெருக்கும் வகையில், புதிய நவீன வேளாண் கருவிகள் மற்றும் இயந்திரங்களின் பயன்பாடு குறித்து விவசாயிகளுக்கு அனைத்து அரசு விதைப் பண்ணைகள் மூலம் 1.44 கோடி ரூபாய் செலவில் பயிற்சி அளிக்கப்படும். இது தவிர, 28.59 கோடி

ரூபாய் மதிப்பில் வேளாண்மைப் பொறியியல் துறை மூலமும், 40 கோடி ரூபாய் மதிப்பில் தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கி மூலமும் பல்வேறு வகையான கனரக இயந்திரங்கள் வாங்கப்பட்டு விவசாயிகளுக்கு வாடகைக்கு விடப்படும்.

7. விவசாயிகள் தங்களுடைய வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் பழுதடையும் பொழுது, அவற்றை பழுது நீக்கம் செய்ய நகர்ப்புறங்களை நோக்கி செல்ல வேண்டியுள்ளது. இதனை உணர்ந்த **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா** அவர்கள், கிராமப்புற இளைஞர்கள் சுயதொழில் தொடங்கும் வகையில், 42.90 லட்சம் ரூபாய் மதிப்பில் ஆண்டுதோறும் 600 கிராமப்புற இளைஞர்களுக்கு வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் பழுதுநீக்கம் மற்றும் பராமரிப்பு குறித்த ஆறு மாத கால பயிற்சியை வேளாண் பொறியியல் துறை மூலமாக அளிக்க ஆணையிட்டுள்ளார்கள்.

8. விவசாயிகள் உடனுக்குடன் விதைகள், தரமான உரங்கள் மற்றும் தட்பவெட்ப நிலை குறித்த

விவரங்களை விரைவாக தெரிந்துகொள்ளும் வகையில், 1.22 கோடி ரூபாய் மதிப்பில் வேளாண் துறையிலுள்ள 59 ஆய்வகங்கள் மற்றும் இதர அலுவலகங்களுக்கு அகண்ட அலைவரிசையுடன் கூடிய கணினி வசதியை ஏற்படுத்தித் தர **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா** அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

9. 10 மாவட்டங்களில் இயங்கிவந்த விதை சுத்திகரிப்பு நிலையங்கள் தற்போது சரிவர இயங்காத நிலையில் உள்ளன. விவசாயிகளுக்கு தரமான விதைகளை உற்பத்தி செய்து உரிய காலத்தில் வழங்கும் வகையில், இந்த விதை சுத்திகரிப்பு நிலையங்கள் 5.25 கோடி ரூபாய் செலவில் நவீனப்படுத்தப்படும்.

10. இரண்டாம் பசுமை புரட்சிக்கு வித்திடும் வகையில், **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா** அவர்கள், இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் செயல்படுத்தாத புதுமையான திட்டத்தை உருவாக்கி உள்ளார்கள். இந்தத் திட்டத்தின்படி, 4

கோடி ரூபாய் மதிப்பில், மண்வளம், உரப் பரிந்துரை, இடுபொருள் விநியோகம், நுண்ணூட்டச் சத்துக்கள் போன்ற விவரங்களை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த கையேடு ஒன்றினை 21 லட்சம் விவசாயிகளுக்கு முதற்கட்டமாக வழங்கப்படும் என்பதை மட்டற்ற மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

11. பெருநகர மக்களின் அன்றாட காய்கறி தேவையை பூர்த்தி செய்யும் வகையில், 17 கோடி ரூபாய் மதிப்பில் ஒரு புதிய திட்டத்தை செயல்படுத்த **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா** அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். இதன்படி, சென்னை, திருச்சி, மதுரை, கோவை ஆகிய பெருநகரங்களில் காய்கறி விற்பனை மையங்கள் துவக்கப்பட்டு, பெருநகர மக்களுக்கு காய்கறிகள் நியாயமான விலையில் கிடைக்க வழிவகை செய்யப்படும்.

12. கிருஷ்ணகிரி மாவட்டம், தளி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட அரசு தோட்டக்கலைப் பண்ணையில் 2 கோடி ரூபாய் மதிப்பில் மலர்கள்

மற்றும் காய்கறி பயிர்கள் பசுமைக் குடில்களில் சாகுபடி செய்யப்படுவதுடன், மலர் சாகுபடிக்கு மாதிரி செயல் விளக்க மையமும் அமைக்கப்படும்.

13. விவசாயிகள் தங்கள் விளை பொருட்களை சேமித்து, பாதுகாத்து, விற்பனை செய்ய ஒழுங்குமுறை விற்பனைக்கூட சேமிப்பு கிடங்குகள் உதவுகின்றன. விவசாயிகளின் நலன் காக்கும் வகையில், 82 கோடி ரூபாய் மதிப்பில் 50 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் நவீன கிடங்குகள் அமைக்க **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா** அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

14. திருச்சி மாவட்டம், ஸ்ரீரங்கம் பகுதியில் 4 கோடி ரூபாய் செலவில் வாழை மற்றும் இதர காய்கறிகளுக்காகவும், ஈரோடு மாவட்டம் கோபிச்செட்டிப்பாளையம் பகுதியில் 4 கோடி ரூபாய் செலவில் காய்கறிகள் மற்றும் பழங்களுக்காகவும் குளிர்பதன வசதியுடன் கூடிய வணிக வளாகங்கள் அமைக்கப்படும்.

15. காய்கறி மற்றும் பழங்களுக்கென தேனி, திருச்சி, புதுக்கோட்டை, விருதுநகர், தூத்துக்குடி ஆகிய 5 மாவட்டங்களிலும், புளிக்கென தருமபுரி மாவட்டத்திலும், மிளகாய் மற்றும் எலுமிச்சைக்கென திருநெல்வேலி மாவட்டத்திலும் 11 கோடி ரூபாய் மதிப்பில் குளிர்பதன வசதியுடன் கூடிய சேமிப்புக் கிடங்குகள் ஏற்படுத்தப்படும்.

16. விவசாயிகளையும் வியாபாரிகளையும் ஒருங்கிணைக்கும் வகையில், 4.8 கோடி ரூபாய் செலவில், முதற்கட்டமாக பயன்பாட்டில் இல்லாத ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் வியாபாரிகளுக்கென தனியாக கடைகள் கட்டித் தரப்படும்.

17. விவசாயிகள் வேளாண் பணிகளை விரைந்து மேற்கொள்ளவும், உடனடித் தேவைகளைப் பூர்த்தி செய்யவும், தற்போது வழங்கப்படும் பொருளீட்டுக் கடன் 1 இலட்சத்திலிருந்து 2 இலட்சமாக உயர்த்தி வழங்கப்படும்.

18. சேலம் மாவட்டம் ஆத்தூர்; நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு; ஈரோடு மாவட்டம் பவானி ஆகிய இடங்களில் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வரும் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்கு 3 கோடி ரூபாய் செலவில் சொந்த கட்டடங்கள் கட்டப்படும்.

******